
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1099**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**42**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# மருத்துவக் கல்வியில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு

## சதிக்கு மேல் சதி செய்த ஒன்றிய அரசு!

**2020**-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தீவிரமாக நடைபெற்ற, அனைத்திந்திய மருத்துவத் தொகுப்பு இடங்களுக்கான வழக்கு விசாரணையின்போது, ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற முடியாது என ஒன்றிய அரசு உறுதியாக நின்றது.

ஒன்றிய அரசின் பொது சுகாதார இயக்குநரகம் தாக்கல் செய்த மனுவில், ‘அனைத்திந்திய அளவில் பொதுத்தேர்வு நடத்தி, இட ஒதுக்கீடு தராமல் மருத்துவ இடங்களை நிரப்பிக்கொள்ளலாம் என தினேஷ்குமார் (1986 ) வழக்கில், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டி இருந்தது. அனைத்திந்திய தொகுப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம், தகுதியான நபர்கள் இந்தியாவின் எந்த பகுதியில் இருந்தாலும், அவர்கள் அனைத்திந்திய தொகுப்பில் உள்ள இடங்களுக்கு தகுதியின் அடிப்படையில் உரிமை கோர முடியும். அதற்கு இட ஒதுக்கீடு அடிப்படையில், உரிமை கோர முடியாது. ஒன்றிய அரசின் தொகுப்பிற்கு ஒதுக்கிய பின்னர், அந்த இடங்களுக்கு மாநில அரசின் இட ஒதுக்கீடு சட்டங்கள் செல்லாது’ என வாதிட்டது.

ஒன்றிய அரசின் சார்பிலும், ஒன்றிய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய மருத்துவக் குழுமம், சுகாதார சேவைகளின் பொது இயக்குநரகம், தேசிய தேர்வுகள் வாரியம், இந்திய பல் மருத்துவக் குழுமம் என ஒன்றிய அரசின் பல்வேறு துறைகள் சார்பிலும், மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டு, தி.மு.க.வும், மற்ற கட்சிகளும் தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டன.

அதாவது, ‘அனைந்திந்திய தொகுப்புக்கு இட ஒதுக்கீடு வழங்க முடியாது. குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்க முடியாது. மருத்துவப் படிப்பின் தரத்தை பாதிக்கும்’ என்று அழுத்தமாக நின்றனர். அதிலும் குறிப்பாக, இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது, தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டனர்.

இப்படியான கடும்வாதங்களால் அந்த வழக்கை விசாரிக்க மறுத்தது, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுப்பையா அமர்வு. இதையடுத்து, மீண்டும், உச்ச நீதிமன்றம் சென்றதுடன், அங்கிருந்து மீண்டும் உயர் நீதிமன்றத்துக்கு வழிகாட்டுதல் பெற்றுதான், கழகத்தின் சார்பில், ஜூலை மாதத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2020-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 17-ஆம் தேதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது, கழகத்தின் சார்பில் அழுத்தமாக வாதங்கள் வைக்கப்பட்டு, 27-ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பாக ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டைப் பரிசீலிக்க, குழு அமைக்க உத்தரவிட்டது உயர் நீதிமன்றம்.

### அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டுச்சதி


உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு எதிராக, அ.தி.மு.க அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு என்கிற பெயரில், உள்ளடி வேலையைத் தொடங்கியது. அதாவது, தீர்ப்பை அந்த ஆண்டே செயல்படுத்த வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்குச் சென்றனர். இந்த வழக்கிலும், ஓ.பி.சி. இடஒதுக்கீடு வழங்குவதற்கு எதிராக வாதங்களை வைக்கத் தொடங்கியது ஒன்றிய அரசு. அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டுச் சதியை உணர்ந்த கழகம், அந்த வழக்கில் தன்னை இணைத்துக்கொண்டு, அ.தி.மு.க. தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டது.

ஏனென்றால், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துவிட்டால், மீண்டும் முதலில் இருந்து சட்டப்போராட்டத்தைத் தொடங்க வேண்டும். இப்படியான நிலையில், நமது வாதங்களால் அந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ‘உயர் நீதிமன்றம் அமைக்கச் சொன்ன குழுவை, முதலில் ஒன்றிய அரசு அமைக்கட்டும். அதன்பின்னர், எப்போது செயல்படுத்தலாம் என்பதை முடிவு செய்வோம்’ என்று அ.தி.மு.க. மனுவை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னர், நான்கு மாதங்கள் தாமதித்து, வேறு வழியின்றி குழு அமைத்தது ஒன்றிய அரசு. இந்தக் குழு, 69 சதவிகித இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற ஒன்றிய அரசுக்கு அறிக்கை கொடுத்தது. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளைக் காரணம்காட்டி, குழுவின் பரிந்துரையை, ஒன்றிய அரசு அமல்படுத்தவில்லை. இதையடுத்து, மீண்டும் சட்டப்போரைத் தொடங்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இந்த முறை ஒன்றிய அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்குத் தயாரானது கழகம்.

பல்வேறு போராட்டங்கள், மக்களின் கோரிக்கைகள், நீதிமன்றத்தின் உத்தரவுகள் என எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. நமது வழக்கறிஞர்கள், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்தது.

‘உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் இந்திய மருத்துவ கவுன்சில் விதிகளின்படி, இட ஒதுக்கீடு தொடர்பாக மாநில அரசு சட்டம் இயற்றாமல் இருந்தால் மட்டுமே, ஒன்றிய அரசு முடிவு எடுக்க முடியும். அனைத்திந்திய மருத்துவப் படிப்புக்கான தொகுப்பில் ஒன்றிய அரசின் பொறுப்பு, கலந்தாய்வு நடத்துவது மட்டும்தான். இட ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்க மாநில அரசுகளுக்கே முழு அதிகாரம் உள்ளது’ என வாதிட்டார், நமது மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்.



அன்றைய நிலையின்படி, 4 ஆண்டுகளில் 3,580 இடங்கள் ஒன்றிய அரசுக்கு வழங்கப்பட்டது. இடஒதுக்கீடு பின்பற்றப்படாததால், 2,700-க்கும் அதிகமான இதர பிற்படுத்தப்பட்ட தமிழக மாணவர்களின் இடங்கள் பறிபோயின. ஆகவே, இட ஒதுக்கீடு விவகாரத்தில் மாநில அரசின் உரிமைகளை ஒன்றிய அரசு அபகரித்துக் கொண்டிருப்பதாக வாதிட்டிருந்தார். இதையடுத்து, ஒன்றிய அரசின் வாதங்களில் தெளிவில்லை என உணர்ந்த தலைமை நீதிபதி, ‘அனைத்திந்திய தொகுப்பில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு அளிக்காமல் நீட் தேர்வு நடத்தக் கூடாது’ என 19.07.2021 அன்று இடைக்கால தீர்ப்பளித்தார்.

### நீதிமன்ற அவமதிப்புப் போராட்டம்

அதன்பின்னர் வழிக்கு வந்த ஒன்றிய அரசு, அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி, ஓ.பி.சி. இட ஒதுக்கீடு வழங்குவதற்கான முடிவை எடுத்தது. வழக்கு 26.07.2021 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஒன்றிய அரசு தரப்பில், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகி, ‘சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் குழு அமைக்கப்பட்டு, அந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டு மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசு வழங்கத் தயாராக உள்ளது. அதனால், நீதிமன்ற அவமதிப்பு ஏதுமில்லை’ என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு மாதிரியாக இடஒதுக்கீட்டைப் பின்பற்ற முடியாது. எனவே, மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு என்பது அனுமதிக்கத்தக்கது என சிறப்புமிக்க தீர்ப்பளித்தார்.

அதையடுத்து, வேறு வழியின்றி 29.07.2021 அன்று ஓ.பி.சி. இட ஒதுக்கீடு வழங்கும் அரசாணையை வெளியிட்டது ஒன்றிய அரசு. இந்த அரசாணைக்கு எதிராக, உயர்சாதி ஏழை மாணவர்கள், பொதுப்பட்டியல் மாணவர்கள் என மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மீண்டும் சதித் திட்டம் அரங்கேறத் தொடங்கியது.

> “மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு என்பது அனுமதிக்கத்தக்கது என சிறப்புமிக்க தீர்ப்பளித்தார்.”

...தொடரும்

## ஒன்றிய பட்ஜெட் வெறும் கண்துடைப்புதான்!

2026-27 நிதியாண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான குறிப்பிடத்தக்க திட்டங்கள் எதுவும் இல்லை என்ற ஏமாற்றம் எழுந்துள்ள நிலையில், கடந்த நிதியாண்டில் ஒன்றிய அரசு வாக்குறுதி அளித்த சமூக பாதுகாப்புத் திட்டங்கள் பலவற்றுக்கும் உரிய நிதி ஒதுக்கப்படவில்லை என்பதும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இது தொடர்பான, முக்கியமான 20 சமூகத் திட்டங்களை ஆய்வு செய்துள்ளது, ‘தி வயர்’ இணையதளம். அதில், ‘ஜல் ஜீவன்’ இயக்கத்திற்காக ரூ.67,000 கோடி செலவிடப்படும் என 2025-26 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நிலையில், திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி செலவிடப்பட்ட தொகை ரூ.17,000 கோடி மட்டுமே என்பது தெரியவந்துள்ளது. அதேபோல, ‘பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – கிராமின்’ எனப்படும் ஒன்றிய அரசின் கிராமப்புற வீடு கட்டும் திட்டத்துக்கு 54 ஆயிரத்து 832 கோடி ரூபாய் எனக் கடந்த நிதியாண்டில் ஒன்றிய அரசு உறுதியளித்தது. ஆனால், செலவிடப்பட்டதோ 32 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மட்டுமே. அதே போல நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்துக்கு 19 ஆயிரத்து 794 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், செலவிட்டதோ 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மட்டுமே.

‘பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா’ எனப்படும் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 19,000 கோடி ரூபாய் செலவிடப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், 11,000 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 21 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு தொழில்முறை பயிற்சி வழங்கும் பி.எம். இன்டர்ன்ஷிப் திட்டத்திற்கு 10 ஆயிரத்து 831 கோடி ரூபாய் செலவிடப்படும் என உறுதி அளித்த நிலையில், வெறும் 526 கோடி ரூபாயை மட்டுமே செலவிட்டுள்ளனர். இவற்றைப் போல ‘பி.எம்.போஷான்’, ‘ஆயுஷ்மான் பாரத்’, ‘ஸ்வச் பாரத்’, ‘மிஷன் சக்தி’, ‘சமக்ர சிக்ஷா’ எனப் பல முக்கிய சமூகத் திட்டங்களுக்கு அறிவிக்கப்பட்ட நிதியைக் காட்டிலும் குறைவாகவே செலவிடப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் யாவும் வெற்று அறிவிப்புகள்தான் என்பதை இந்தத் தரவுகள் உறுதிப் படுத்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





ராதாகிருஷ்ணன்

### மகன் பிறந்தநாளில் தலைவரிடம் வாழ்த்து!

2009-ஆம் ஆண்டு, என் மகன் நரேன் பிறந்தநாளையொட்டி, தானைத் தலைவர், தமிழினக் காவலர், கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெறுவதற்காக என் துணைவியார் ஜெயந்தி, மகள் கீர்த்தனாவுடன் சென்றிருந்தோம். தலைவரைக் கண்டு மகிழ்ந்து எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படத்தை என் வாழ்நாள் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன்.

**– ராதாகிருஷ்ணன்,**
**கழகத் தன்னார்வலர், 150-வது வட்டம்**
**மதுரவாயல் தெற்குப் பகுதி, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்லுரை

### ஜனநாயகம் என்பது வாழ்க்கை நெறி!

1958-ஆம் ஆண்டு, அக்டோபர் 24-ஆம் தேதி, சென்னையில் கே.வி.கே.சாமி நினைவு மன்றத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், பேரறிஞர் அண்ணா கலந்துகொண்டு உரையாற்றினார். ஜனநாயகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்துப் பேசியவர், ‘அரசியலில் தெளிவு இருந்தால், சலிப்புத் தோன்றாது என்றும், ஜனநாயகம் என்பது ஆளுகிற முறை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறி’ என்றும் எடுத்துக் கூறினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131